கைவிட்ட பெற்றோர்: 10 வயதுச் சிறுமி தற்கொலை

திருப்பூர், ஜூலை 28: பெற்றோர் கைவிட்டுச் சென்றதால் பாட்டியின் பராமரிப்பில் இருந்த சிறுமி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

திருப்பூர் வடக்கு காவல் நிலையத்துக்குள்பட்ட ராதா நகர், பட்டத்தரசி அம்மன் கோயில் வீதியைச் சேர்ந்தவர் நடராஜ். இவரது மனைவி வெண்ணிலா. இவர்களுக்கு நந்திதா (10) என்ற பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும் உள்ளனர்.

இந்நிலையில், தம்பதி இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக வெண்ணிலா தனது குழந்தைகளைக் கைவிட்டுவிட்டு வேறொருவரை திருமணம் செய்து கொண்டார். அதேபோல, நடராஜும் வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். பெற்றோரால் கைவிடப்பட்ட இரண்டு குழந்தைகளையும், நடராஜின் தாயான பொன்னம்மாள் (70) வளர்த்து வந்தார்.

மன்னரையில் உள்ள அரசுப் பள்ளியில் 6-ஆம் வகுப்பு படித்து வந்த நந்திதாவுக்கு பெற்றோர் வந்து பார்க்கவில்லை என்ற ஏக்கம் இருந்ததாகவும், தங்களை வளர்க்க பாட்டி கஷ்டப்படுவதாகவும் எண்ணி கடந்த சில நாள்களாக மன வேதனையில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், வழக்கம்போல திங்கள்கிழமை பள்ளிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய நந்திதா, அப்பகுதியில் உள்ள சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்துள்ளார். அப்போது, அதே பகுதியைச் சேர்ந்த லட்சுமி என்ற பெண், நந்திதாவை திட்டியதாகக் கூறப்படுகிறது. இதனால், மேலும் மனமுடைந்த அவர், வீட்டுக்குள் சென்று தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பணி முடிந்து மாலை வீடு திரும்பிய பொன்னம்மாள், நந்திதா தூக்கில் தொங்குவதைக் கண்டு அலறியுள்ளார். சப்தம் கேட்டு வந்த அப்பகுதி மக்கள், இது குறித்து திருப்பூர் வடக்கு காவல் நிலையத்துக்குத் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார், சடலத்தை மீட்டு கூறாய்வுக்காக திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இச்சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

காவல் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த இருசக்கர வாகனங்களைத் திருடிய 3 பேர் கைது

திருப்பூர், ஜூலை 28: திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருசக்கர வாகனங்களைத் திருடிய 3 பேரை போலீஸார் கைது செய்தனர்.

திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் திருட்டு, விபத்து உள்ளிட்ட வழக்குகள் தொடர்பாக பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் காவல் நிலையத்தின் பின்புறம் உள்ள காலி இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், வழக்கு ஒன்றில் தொடர்புடைய வாகனத்தை தாங்கள் நிறுத்தி வைத்திருந்த இடத்தில் போலீஸார் அண்மையில் தேடியுள்ளனர். அப்போது, அந்த வாகனத்தை காணவில்லை. இதனால், சந்தேகமடைந்த போலீஸார், மற்ற வாகனங்களை சரிபார்த்தபோது, 10 இருசக்கர வாகனங்கள் மாயமானது தெரியவந்தது.

இது தொடர்பாக போலீஸார் மேற்கொண்ட விசாரணையில், பழைய பேருந்து நிலையம் அருகே இலைக்கடை நடத்தி வரும் ஆறுமுகம், அவரிடம் பணியாற்றும் சுப்பிரமணி, முருகேசன் ஆகியோர் வாகனங்களைத் திருடியது தெரியவந்தது.

இதையடுத்து, 3 பேரையும் கைது செய்த போலீஸார், அவர்களிடமிருந்த 7 இருசக்கர வாகனங்கள், ஆட்டோவை பறிமுதல் செய்தனர்.

இருசக்கர வாகனம் மீது கல்லூரி பேருந்து மோதியதில் தந்தை உயிரிழப்பு

மகள் படுகாயம்

திருப்பூர், ஜூலை 28: திருப்பூரில் இருசக்கர வாகனம் மீது தனியார் கல்லூரி பேருந்து மோதியதில் தந்தை உயிரிழந்தார். மகள் படுகாயமடைந்தார்.

திருப்பூர் மாநகராட்சிக்குள்பட்ட ஓடக்காடு பகுதியைச் சேர்ந்தவர் அசோக்குமார் (45). இவரது மகள் அக்ஷயா (20). ஈரோட்டில் தனியார் கல்லூரியில் படித்து வருகிறார்.

இந்நிலையில், வழக்கம்போல கல்லூரி பேருந்தில் அக்ஷயாவை ஏற்றிவிடுவதற்காக இருசக்கர வாகனத்தில் அசோக்குமார் செவ்வாய்க்கிழமை அழைத்து வந்துள்ளார். நடராஜா திரையரங்கம் அருகே வந்தபோது, எதிரே அதிவேகமாக வந்த தனியார் கல்லூரி பேருந்து அசோக்குமார் வாகனத்தின் மீது மோதியது.

இதில், வாகனம் இழுத்துச் சென்றதில் உடல் நசுங்கி அசோக்குமார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த அக்ஷயாவை அங்கிருந்தவர்கள் மீட்டு திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்காலிக ஓட்டுநரான ரஞ்சித் கல்லூரி பேருந்தை ஆண்டிபாளையத்தில் எடுத்தது முதலே அதிவேகமாக ஓட்டி வந்ததாகவும், பலமுறை அவரிடம் கூறியும் வேகத்தை குறைக்கவில்லை எனவும் பேருந்தில் பயணித்த மாணவர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து, விபத்தை ஏற்படுத்திய கல்லூரி பேருந்து ஓட்டுநரான ரஞ்சித்தை திருப்பூர் மத்திய போலீஸார் கைது செய்தனர்.

ஏஐடியூசி தெரு வியாபாரிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

திருப்பூர், ஜூலை 28: ஏஐடியூசி தெரு வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் 11 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் பழனிசாமி தலைமை வகித்தார்.

இதில், தெரு வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்புச் சட்டத்தை முறையாக அமல்படுத்த வேண்டும். காவல் துறை, உள்ளாட்சி, நெடுஞ்சாலை, வனத் துறை அதிகாரிகள் தெரு வியாபாரிகளை அப்புறப்படுத்தும் மற்றும் அச்சுறுத்தும் சட்டவிரோத நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

வியாபார குழுத் தேர்தலை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்த வேண்டும். உடனடியாக கணக்கெடுப்பு நடத்தி அனைத்து தெரு வியாபாரிகளுக்கும் அடையாள அட்டை, வியாபாரச் சான்று வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 11 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கோஷம் எழுப்பினர்.

புனித ஜோசப் மகளிர் கல்லூரியில் 'பாதுகாப்பான பயணம்' விழிப்புணர்வு

சாலைப் பாதுகாப்பு பயிற்சியை நிறைவு செய்து சான்றிதழ் பெற்ற மாணவிகள். உடன், சிறப்பு அழைப்பாளர்கள், கல்லூரி நிர்வாகிகள்.

திருப்பூர், ஜூலை 28: திருப்பூர் புனித ஜோசப் மகளிர் கல்லூரியில் சாலைப் பாதுகாப்பு மன்றம் சார்பில் 'பாதுகாப்பான பயணம்' என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி, சான்றிதழ் வழங்கும் விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி செயலர் அருள் சீலி, கல்லூரி முதல்வர் சகாய தமிழ்செல்வி ஆகியோர் தலைமை வகித்தனர். கே.வி.ஆர். நகர் காவல் ஆய்வாளர் பி. வெங்கடாசலம் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, சாலைப் பாதுகாப்பு விதிகள், போக்குவரத்து ஒழுங்குகள், தலைக் கவசம் மற்றும் சீட் பெல்ட் அணிவதன் அவசியம் உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இதையடுத்து, திருப்பூர் மாநகர தலைமைப் போக்குவரத்துகாவலர் முத்துபாரதி, துணைத் தலைமை போக்குவரத்து காவலர் சி. வாசுதேவன், பயிற்சியாளர் பி.அல்போன்ஸ் ரஜினிகாந்த் ஆகியோரும் சாலைப் பாதுகாப்பு தொடர்பாக பேசினர். இதைத் தொடர்ந்து, கல்லூரியில் சாலைப் பாதுகாப்பு குறித்து நடத்தப்பட்ட பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முன்னதாக, சாலை விதிகளை கடைப்பிடித்து பாதுகாப்பான சமூகத்தை உருவாக்க மாணவிகள் உறுதிமொழி ஏற்றனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் சாலைப் பாதுகாப்பு மன்ற ஒருங்கிணைப்பாளர் விகாஷினி செய்திருந்தார்.

பஞ்சாப் நேஷனல் பேங்க் பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon!

SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை 14. தொலைபேசி: 044-28112261-90 மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8(6) மற்றும் 9(1)ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் **கடன்தாரர்(கள்)** மற்றும் **அடமானதாரர்(கள்)க்கு** குறிப்பாகவும் கடன் வழங்கிய பஞ்சாப் நேஷனல் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரியாளர், **கீழே குறிப்பிட்ட பெயர்களில் உள்ள கடன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்)** ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வந்து சேரவேண்டிய கீழ் குறிப்பிட்டுள்ள கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு ஆக்கப்பூர்வ கலாநிதியில் எடுத்துக்கொண்டு, அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்துக்களை, **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** எனும் அடிப்படையில் **18.08.2026** அன்று விற்கப்பட உள்ளன.

கடன்தாரர் / அடமானதாரர்/மேம்படுத்துநர்:

1) **M/s. RBR Garments Private Limited,** எண்.177/3-A1, பச்சாங்காட்டுப்பாளையம், காளமுகூர் கிராமம், அருள்புரம் அஞ்சல், திருப்பூர் – 641 605.
2) **திரு. B. சண்முகசுந்தரம்,** 1/556, TPN கார்டன், K. செட்டிப்பாளையம், தாராபுரம் சாலை, திருப்பூர் – 641 604.
3) **திருமதி. S. வைஷ்ணவி மீனா,** 1/556, TPN கார்டன், K. செட்டிப்பாளையம், தாராபுரம் சாலை, திருப்பூர் – 641 604

அடமானத்தில் உள்ள சொத்தின் விவரங்கள்

பிணையச் சொத்தின் விவரங்கள்: M/s. RBR Garments Pvt Ltd இன் பெயரில் உள்ள சொத்து திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார்பதிவு மாவட்டம், திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், காளமுகூர் கிராம நகராட்சி வரியத்தின் எல்லைகளுக்குட்பட்ட, அருள்புரம் அஞ்சல், காளமுகூர் கிராமம், பச்சாங்காட்டுப்பாளையம் சர்வே எண்.177/3A1, 178/3, 179/3B1C, 179/3B1B இல் அடங்கிய M. P. மில் தோட்டம், கதவு எண்.7/67A, 7/67A1, 7/67B, 7/67C ஆகியவைகளில் அமைந்துள்ள நிலம் & கட்டடம் **வகை எண்.I:** G. சர்வே எண்.177/3A1 இன் நிலங்கள் பரப்பளவு 4.95ஏக்கர்கள் @ ரூ. 4.01 அதில் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.177/3A2 நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான, G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்கள், G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், G. சர்வே எண்.177/3B இன் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலம். **வகை எண்.II :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், G. சர்வே எண்.177/2A இன் கிழக்கு மேற்காக வாகனப் பாதை மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.178/3 இன் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 1.40ஏக்கர்கள் நிலம். **வகை எண்.III :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.178/3, இன் பரப்பளவு 0.04ஏக்கர்கள் முக்கோண வடிவங்கொண்ட நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3B1B இன் பரப்பளவு 1.44ஏக்கர்கள் நிலங்கள், G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3A & 179/2 இன் உள்ள கிழக்கு மேற்காக கால்வாய்க்கு கிழக்கில், G. சர்வே எண்.178 பகுதி இன் நிலங்களுக்கு தெற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலம். **வகை எண். IV :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.179/3B2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு வடக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G.சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.V :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.179/3B2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 2.06 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3B1C இன் பரப்பளவு 1.26½ ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.VI :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலங்களுக்கு மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.VII :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்:M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.15 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B பகுதியின் நிலத்திற்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.VIII :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண். 179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 4.29 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், G. சர்வே எண்.179/3A & 179/2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.178/3 இன் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலம். ஆவண எண்.744/2002, 758/2002, 1763/2002, 5474/2003 & 2197/2004 இல் குறிப்பிட்டபடி **வகை எண்.I முதல் வகை எண்.VIII வரை** உள்ள மொத்தப் பரப்பளவு 8.43 ஏக்கர்கள் நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள ரூப்பர் வடிவமைப்பு கொண்ட கட்டிடம், சன்னல்கள், கதவுகள் போன்ற பிற, கதவு எண்கள்.7/67A, 7/67A1, 7/67B & 7/67C, சொத்து வரி மதிப்பீட்டு எண்.2033, 7736, 2034 & 2035, அஞ்சல் E. B. இணைப்பு எண். 03-213-001-1972, 03-213-001-2100 & 03-213-001-1105 அதனுடன் ஒயரிங்குகள், வைப்புநிதிகள் போன்ற பிற மற்றும் அதனுடன் வழக்கமான நடைவழி மற்றும் எரிய உரிமைகள் போன்ற பிற உட்பட மற்றும் சொத்திற்கு செல்லும் இதர வழக்கமான சாலைகள் மற்றும் வாகனப்பாதைகள் உபயோக உரிமைகள் உட்பட.

குறைந்தபட்ச கேப்பு விலை: ரூ. 26,28,05,000/- பேவணித் தொகை: ரூ. 2,62,80,500/-

வங்கிக்கு தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட சொத்துக்களுக்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை.

13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி: 25-03-2024	
13(4) SARFAESI சட்டம் 2002ன் படி கவாதீன அறிவிப்பு தேதி: 29-06-2024 (திருப்பூர் தலைமை நீதித்துறை நடுவரிடமிருந்து சொத்தை நேரில் கையகப்படுத்துவதற்கான உத்தரவை வங்கி பெற்றுள்ளது)	
EMD செலுத்த கடைசி தேதி	17.08.2026 அன்று மாலை 5.00 வரை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடுதல்	11.08.2026
மின் ஏல தேதி மற்றும் நேரம்	18.08.2026 நேரம்: காலை 11 முதல் மாலை 4 மணி வரை
ஏல உயர்வு (ஏலத்தை உயர்த்திக் கோருவதற்கான குறைந்தபட்ச தொகை): ரூ.1,00,000/-	

தொடர்புக்கு: திரு. VNS சந்திரசேகர் அச்சல்லா, முதன்மை மேலாளர்/அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மொபைல்: 8328235168

வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை 30.06.2026 அன்றுள்ளபடி ரூ.52,63,40,651.32/- (ரூபாய் ஐம்பத்து இரண்டு கோடியே அறுபத்து மூன்று லட்சத்து நாற்பது ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஒன்று மற்றும் பைசா முப்பத்து இரண்டு மட்டும்)

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (1). "எங்கு உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்ன உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்னவெல்லாம் உள்ளதோ உள்ள நிலையில்" என்ற அடிப்படையில் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். (2). அட்டவணையில் மேற்குறிப்பிட்ட பிணைச் சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த தகவலுக்குக் கருப்பட்டுள்ளன, எனினும் இந்த பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதல்கள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3). விற்பனையானது கீழே கையொப்பமிட்டவரால் **18.08.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை https://baanknet.com** என்ற இணையதளம் மூலமாக நடத்தப்படும். (4). விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://baanknet.com & www.pnbindia.in** ஆகிய இணையதளங்களில் காணலாம்.

SARFAESI சட்டம் 2002 விதி 8 (6) & 9 (1) ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.

தேதி : 28.07.2026 இடம் : சென்னை | முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி

IndusInd Bank

பதிவு அலுவலகம் : இன்டஸ்இண்ட் பேங்க் லிமிட்டெட், 2401, ஜெனரல் திம்மையா சாலை (கன்டோன்மெண்ட்) புனே - 411 001 இந்தியா எண். 25, ஸ்கூபிள் ரீச், A ப்ளாக், 3 வது தளம், கதீட்ரல் சாலை, கோபாலபுரம், சென்னை - 600 086

சுவாதீன அறிவிப்பு (பார்க்க - விதி 8(1)) (அசையா சொத்துக்காக)

இப்பகுதி, இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், **இன்டஸ்இண்ட் பேங்க் லிமிட்டெட்** - ன் அதிகாரபூர்வ அலுவலராகவும், பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் '2002 (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) ன் கீழும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(2) - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 (இனிமேற்கொண்டு "விதிகள்" என்றே அழைக்கப்படும்)-ன் விதி 9 ன் படி தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தினை செயலுறுத்தியும், இதன் கீழ்குறிப்பிடப்பட்ட கடன்தாரர் **1). M/s. வீவின் லேபிள்,** அதன் பங்குதாரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும்கிறது, 50, NA சாணம் ஐயப்பா நகர், PAP கால்வாய் சாலை, முத்தணம்பாளையம், நல்லூர், திருப்பூர் - 641606 தமிழ்நாடு. **2. திரு. மணிகண்டராஜன் G** 16W, சாணம் ஐயப்பா நகர், PAP கால்வாய் சாலை, முத்தணம்பாளையம், நல்லூர், திருப்பூர் - 641606, தமிழ்நாடு **3. திருமதி. முருகம் சீதா,** 16W சாணம் ஐயப்பா நகர், PAP கால்வாய் சாலை, முத்தணம்பாளையம், நல்லூர், திருப்பூர் - 641606, தமிழ்நாடு. **4. M/s. ஆல்வின் இன்னோவேஷன்** அதன் உரிமையாளர் திரு. மணிகண்டராஜன் G ஒரேஷ்வரன் என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது, 50 NA சாணம் ஐயப்பா நகர், PAP கால்வாய் சாலை, முத்தணம்பாளையம், நல்லூர், திருப்பூர் - 641606 தமிழ்நாடு ஆகியோருக்கு **20.03.2026** தேதிய கோரிக்கை அறிவிப்பு அனுப்பி, அதில் குறிப்பிட்டுள்ள 2026 பிப்ரவரி 28-ம் தேதிய நிலுவைத்தொகை **ரூ.1,80,89,163.20/- (ரூபாய் ஒரு கோடியே எண்பது இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து நூற்று அறுபத்து மூன்று மற்றும் பைசா இருபது மட்டும்)** மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, அபராத வட்டி, செலவு, கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட தொகையை மேற்குறிப்பிட்ட அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக் கோரினார்.

கடன்தாரர்கள் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியபடியால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ் குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன 'சட்டத்தின் பிரிவு 13 உப்பிரிவு (4) - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 ன் கீழான தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி, **2026 ஜூலை 24 ம்** தேதியன்று கவாதினம் எடுத்துள்ளார்.

குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் பொது மக்கள் எவரும் இச்சொத்து மீது எந்த வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என எவும், அவ்வாறு ஏற்படுத்தப்படும் எந்த வில்லங்கமும் **இன்டஸ்இண்ட் பேங்க் லிமிட்டெட்** - க்கு செலுத்தப்ட வேண்டிய **30 ஜூன் 2026** தேதிய நிலுவைத்தொகை **ரூ. 1,61,01,775.70/- (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து ஒரு இலட்சத்து ஒராயிரத்து எழுநூற்று எழுபத்து ஐந்து மற்றும் பைசா எழுபது மட்டும்)** மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள், இதர கட்டணங்கள் மற்றும் நிகழ் செலவுகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டது. (கோரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டதிலிருந்து எதேனும் தொகை செலுத்தப்பட்டிருப்பின், அத்தொகையை கழித்துக்கொள்ளவும்)

ஜாமீன் சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக, மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 (8) ன் படி, கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

ஜாமீன் சொத்து விபரம்

திருப்பூர் இணை II சார்பதிவுக்தின் கிழைய ஆவண எண். 1906/2022 தேதி - 07.04.2022 ன் வாயிலாக திரு சதீஷ்குமாருக்கு சொந்தமான சொத்து - திருப்பூர் மாவட்டம் தாலுக்கா, திருப்பூர் நகராட்சி டவுன், திருப்பூர் கிராமம், பழைய வார்டு எண். 16, புதிய வார்டு எண். 56, திருப்பூர் நகராட்சி டவுன், சர்வே எண். 127/4 தற்போதைய சர்வே எண். 10/4, ப்ளாக் எண், 7, T S வார்டு டீ, பட்டா எண். 736 ல் அமையப்பெற்ற 4.30 ஏக்கரில் உள்ள 2.15 ஏக்கரில் உள்ள வீட்டில் உள்ள 1310.5 சதுர அடி புஞ்சை ஸைட் எண். 1 மற்றும் அதனுடன் கூடிய கதவு எண். 4/10 வைக்கொண்ட கட்டிடம் மற்றும் வளாகம் உள